# காஞ்சிபுரம் வடக்கு, தெற்கு மாவட்ட இளைஞர் அணி சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புக்கு நேர்காணல்!

# துணை முதல்வர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!





சென்னை, ஜீன் 14-

தி.மு.கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், சமூக வலைதளம் சார்ந்த அவர்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பொறுப்புக்கு, தமிழ்நாடு முழுவதும் இருந்து 1400க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த நிலையில், கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் அவர்கள், இப்பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்கள் இதுவரை ஆற்றிய பணிகள். கொண்டு வந்திருந்த 'மினிட்' புத்தகங்கள் அவர்களின் சமூக வலைதளப் பக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

மாநில துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் முன்னிலையில், காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களுக்கான சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித் திருந்தவர்களை நேற்று நேர்காணல் செய்தார்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான புதிய உபகரணங்கள் கண்காட்சி!

சென்னை, ஜுன்.14-

மாற்றுத்திறனாளிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உதவி உபகரணங்களுடன் நவீன தொழில்நுட்ப வசதிகள் (Advanced Technology) கொண்ட புதிய உதவி உபகரணங்களை காட்சிப்படுத்தி அவ்வுபகரணங்களின் செயல்பாடு குறித்து மறுவாழ்வு மருத்துவர்கள், மறுவாழ்வு பணியாளர்கள், மாற்றுத்திறனாளி பயனாளிகள் மற்றும் துறை வல்லுநர்கள் மூலம் ஆய்வு செய்யவும் தகுதியான உபகரணங்களை தேர்வு செய்ய ஏதுவாகவும் புதிய உபகரணங்களுக்கான கண்காட்சி (TECH4ALL) 12.06.2025 மற்றும் 13.06.2025 ஆகிய தினங்களில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்த கண்காட்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் அரசு செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி எம்.லக்ஷ்மி, இணை இயக்குநர் திருமதி ஃபெர்மி வித்யா மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் 48 உதவி உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்ட உதவி உபகரணங்களை 86 துறை சார்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களும் 836 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பொது மக்களும் பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர். இக்கண்காட்சியில் சிறப்பு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை சேர்ந்த சுமார் 300 மாணவ மாணவியரும் பார்வையிட்டு உதவி உபகரணங்களின் பயன்பாடுகளை கண்டறிந்தனர்.

இக்கண்காட்சியின் மூலம் துறை அலுவலர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் பொது மக்கள் மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய உதவி உபகரணங்களை பார்வையிடவும், பயன்பாடு களை தெரிந்துகொள்ளவும், அதனை மதிப்பீடு செய்யவும் உதவிகரமாக விளங்கியது. இந்த கண்காட்சியின் மூலம் துறை வல்லுநர்கள், மாற்றுத்திறனாளிகள், பொது மக்கள் மற்றும் மாணவ மாணவிகள் என சுமார் 1500 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – தஞ்சை மாவட்டம் – தம்பிக்கோட்டை வடகாடு பகுதியில் சேவையாற்றும் அரசு மேல்நிலைப் பள்ளியில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அங்கு கட்டப்பட்டு வரும் புதிய வகுப்பறைக் கட்டடங்களைப் பார்வையிட்டு, மாணவர்களின் கற்றல் அடைவுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். பள்ளி வளர்ச்சிக்கான கோரிக்கைகளைக் கேட்டறிந்து விரைவில் நிறைவேற்றப்படும் என உறுதியளித்தார். பிரதானக் கோரிக்கையான ஆய்வகம் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி உடனிருந்தார்.

### மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. வரவேற்புரை!

## தென்காசி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்புரை!

தென்காசி, ஜுன் 14 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ.சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர், மண்டல பொறுப்பாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர், தென்காசி மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் சங்கரன்கோவில் சட்ட மன்ற உறுப்பினர் ஈ.ராஜா வரவேற்புரையாற்றினார்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க நிர்வாகி கள் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ.சுப்பையா தலைமையில் நடைபெற்றது. தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர், மண்டல பொறுப்பாளர், தூத்துக்குடி நாடாளு மன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று கழக நிர்வாகிகளிடம் கருத்துக்களை கேட்டறிந்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கியும், அண்ணன் தளபதி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க உறுப்பினர்கள் சேர்க்கையை தீவிர படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு உரையாற்றினார்.

முன்னதாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் தென்காசி மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கே.கே.எஸ். எஸ். ஆர்.இராமச்சந்திரன் ஆலோசனைகள் வழங்கி பேசினார்.

இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.



தூத்துக்குடி சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி மாநகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மகளிருக்கு தையல் இயந்திரம், கிரைண்டர், மிதிவண்டி, இஸ்திரி பெட்டி, இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பெ.கீதா ஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி, துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மதியழகன், அன்பழகன், ராஜ் மோகன் செல்வின், பால குருசாமி, அன்னலட்சுமி கோட்டூர் ராஜ், அதிஷ்டமணி, ரவீந்திரன், துறைமுகம் புளோரன்ஸ், சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.